## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 4-2 - பாலனாய்
### (காலதேசங்களால் விலகி இருக்கையால் மிக அரிதான பகவதநுபவங்களை ஆசைப்பட்டு நைகின்ற தலைமகளின் தன்மை கண்டு தாய் இரங்கிக் கூறும் பாசுரம்)

3018 * பாலனாய் * ஏழுலகுண்டு பரிவின்றி *
ஆலிலை * அன்னவசம் செய்யும் அண்ணலார் **
தாளிணை மேலணி * தண்ணந்துழாய் என்றே
மாலுமால் * வல்வினையேன் மடவல்லியே 1

3019 வல்லி சேர் நுண்ணிடை * ஆய்ச்சியர் தம்மொடும் *
கொல்லைமை செய்து * குரவை பிணைந்தவர் **
நல்லடி மேலணி * நாறுதுழாய் என்றே
சொல்லுமால் * சூழ்வினையாட்டியேன் பாவையே 2

3020 பாவியல் வேத * நன்மாலை பல கொண்டு *
தேவர்கள் மாமுனிவர் * இறைஞ்ச நின்ற **
சேவடி மேலணி * செம்பொன் துழாய் என்றே
கூவுமால் * கோள்வினையாட்டியேன் கோதையே 3

3021 கோதில வண்புகழ் * கொண்டு சமயிகள் *
பேதங்கள் சொல்லிப் * பிதற்றும் பிரான் பரன் **
பாதங்கள் மேலணி * பைம்பொன் துழாய் என்றே
ஓதுமால் * ஊழ்வினையேன் தடந்தோளியே 4

3022 தோளிசேர் பின்னை பொருட்டு * எருதேழ் தழீஇக் *
கோளியார் கோவலனார் * குடக்கூத்தனார் **
தாளிணை மேலணி * தண்ணந்துழாய் என்றே
நாளுநாள் * நைகின்றதால் என்தன் மாதரே 5

3023 மாதர்மா மண்மடந்தை பொருட்டு * ஏனமாய் *
ஆதியங்காலத்து * அகலிடம் கீண்டவர் **
பாதங்கள் மேலணி * பைம்பொன் துழாய் என்றே
ஓதும்மால் * எய்தினள் என்தன் மடந்தையே 6

3024 மடந்தையை * வண்கமலத்திருமாதினை *
தடங்கொள் தார்மார்பினில் * வைத்தவர் தாளின் மேல் **
வடங்கொள் பூந்தண்ணந்துழாய் * மலர்க்கே இவள்
மடங்குமால் * வாணுதலீர்! என் மடக்கொம்பே 7

3025 கொம்புபோல் சீதை பொருட்டு * இலங்கை நகர் *

அம்பெரி உய்த்தவர் * தாளிணை மேலணி **
வம்பவிழ் தண்ணந்துழாய் * மலர்க்கே இவள்
நம்புமால் * நான் இதற்கு என் செய்கேன்? நங்கைமீர்! 8

3026 நங்கைமீர்! நீரும் * ஓர் பெண் பெற்று நல்கினீர் *
எங்ஙனே சொல்லுகேன்? * யான் பெற்ற ஏழையை **
சங்கென்னும் சக்கரம் என்னும் * துழாய் என்னும் *
இங்ஙனே சொல்லும் * இராப்பகல் என் செய்கேன்? 9

3027 என் செய்கேன்? என்னுடைப் பேதை * என் கோமளம் *
என் சொல்லும் * என் வசமும் அல்லள் நங்கைமீர்! **
மின்செய் பூண்மார்பினன் * கண்ணன் கழல் துழாய் *
பொன்செய் பூண்மென்முலைக்கென்று * மெலியுமே 10

3028 * மெலியும் நோய் தீர்க்கும் * நம் கண்ணன் கழல்கள் மேல் *
மலிபுகழ் வண்குருகூர்ச் * சடகோபன் சொல் **
ஒலிபுகழ் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
மலிபுகழ் வானவர்க்காவர் * நற்கோவையே 11

**அடிவரவு:** பாலன் வல்லி பாவியல் கோதில தோளி மாதர்
மடந்தை கொம்பு நங்கை என் மெலியும் கோவை